**வலிகாமம் மேற்கு பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 54 காணிகளின் பெறுமதிகளினை மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டு இறுதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வேலைகள் பூர்த்தியாக்கப்படாத 07 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 12,092,572 தொகையான மதீப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | மணல் தட்டுப்பாடு மற்றும் மழை பெய்ததால் வேலைக்கான கால நீடிப்பு வழங்கப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | பொறித்தொகுதியும் இயந்திரங்களும் ரூபா 13,226,959 ஆனது நிதிக்கூற்றுக்களில் ரூபா 13,700,499 தொகையாக காட்டப்பட்டிருந்தது. | பட்டியலில் கணினி தட்டச்சு தவறினால் ஏற்பட்ட பிழை காரணமாக வேறுபாடு காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சூரிய மின் விற்பனை மூலம் பெறவேண்டிய வருமானம் ரூபா 172,679 மற்றும் சபையின் அலுவலக மின்சாரச் செலவீனம் ரூபா 90,428 என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்து வரும் நிதியாண்டில் கவனத்தில் கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,243,628 பெறுமதியான ஆதனவரி நிலுவைக்குரிய பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிட்சிக்க முடியாமல் இருந்தது. | தொடர்ந்து வரும் காலங்களில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு தாயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2), (3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,898,650 ஆன 07 காலங்கடந்த வைப்புக்களினை தீர்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் தீர்வு செய்ய நடவடிக்கை எக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமான பத்திரிகை 2021 யூலை 08 ஆந் திகதிய 2235 / 54 ஆம் இலக்கத்தின் பகுதி I இன் 11ஆவது விடயம் | குடிபுகு சான்றிதழ் பெறப்படாத கட்டிடங்களுக்கு கால நீடிப்பு ரூபா 1,685,000 கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குடிபுகு சான்றிதழ் பெறப்படாத கட்டிடங்களுக்கு கால நீடிப்பு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், கால நீடிப்பு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 77,176,381 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 53,636,103 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 11,814,782 | 29,350,589 | 20,106,961 | 9,243,628 | 10,456,472 | 28,912,333 | 11,119,925 | 17,792,408 |
| (ii) வாடகை | 30,077,745 | 30,364,683 | 30,342,183 | 22,500 | 20,597,435 | 21,592,410 | 21,607,922 | (15,512) |
| (iii) உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 2,879,800 | 3,841,185 | 3,835,185 | 6,000 | 2,075,800 | 3,011,706 | 3,004,706 | 7,000 |
| (iv) ஏனைய வருமானம் | 74,323,568 | 90,873,120 | 86,499,936 | 4,373,184 | 56,504,650 | 81,513,915 | 75,675,755 | 5,838,160 |
| கூட்டுத் தொகை | 119,095,895 | 154,429,577 | 140,784,256 | 13,645,312 | 89,634,357 | 135,030,364 | 111,408,308 | 23,622,056 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் ஆதனங்களான வீடு, கடை மற்றும் நிலம் என்பவற்றிக்கான மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி ரூபா 11,558,181 ஆக காணப்பட்ட போதிலும், அதில் ரூபா 6,735,553 தொகை மாத்திரமே சபையினால் அறவிட முடிந்ததாக இருந்தது. அத்துடன் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில உள்ளவாறு காணப்பட்ட ரூபா 17,792,408 வீதவரியும் வரியும் நிலுவையிலிருந்து ரூபா 10,096,976 தொகை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்ததுடன் மீதித் தொகை 05 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டிருந்தன | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | நிலுவைப் பணத்தினை துரிதமாக அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வைப்பில் இடப்பட்ட நிதி ரூபா 224,142,697 தொகையினை பயன்படுத்தி 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அத்தியாயம் IV இன் 108 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும், வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | தொடர்ந்துவரும் நிதியாண்டுகளில் இதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவைகளினை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வருமான மிகையிலிருந்து மூலதன அபிவிருத்தி ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 27,500,000 நிதியினை மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதன அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | மூலதன அபிவிருத்தி வேலைகளினை உரிய காலப்பகுதியல் ஈடுபடுத்தி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஒப்பதகாரர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 498,480 தொகையினை தீர்ப்பதற்கு 08 வருடங்களிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி கிடைக்கப்பெறாத காரணத்தினால் நிலுவையானது சீர்செய்யப்படாது காணப்படுகின்றன. | செலுத்த வேண்டிய தொகையினை மிக விரைவாக செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரைக |
|---|---|---|
| 1915 இன் 15 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15(1) இன் பிரகாரம், சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப கட்டிடமானது கட்டப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தி குடிபுகு இயைபுச் சான்றிதழ் (COC) வழங்கப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 109 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களிற்கு குடிபுகு இயைபுச் சான்றிதழ் வழங்கப்படாமல் காணப்பட்டிருந்தன. | சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | குடிபுகு இயைபுச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலுள்ள 18 மயானக் காணிகளினை மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் உரித்தாக்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளினை பாரதீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | சொத்துக்களின் உரிமையினை உரித்தாக்கும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதிட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 05 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையிலும் 03 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையும் விலகல்களும் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் 7 சதவீதமான விலகலும் இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாராத விதமாக வருமானங்கள் கிடைக்கப்பெற்றதனாலும் செலவுகள் அதிகரித்தமையும் வேறுபாட்டுக்கு காரணமாக அமைகின்றன. | தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு கவனத்துடன் பாதீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும். |